

# தமிழ்நாடு அரசு
# அண்ணா மேலாண்மை நிலையம்
## அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம், சென்னை- 40.

## ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பணிகளுக்காக 2010 ஆம் ஆண்டு
## பூர்வாங்கத் தேர்வுக்கானப் பயிற்சி

2010ம் ஆண்டில் மத்திய தேர்வாணைக்குழு (யுபிஎஸ்சி) நடத்தும் சிவில் சர்வீஸ் பூர்வாங்கத் தேர்வு 2010 (Preliminary Examination - 2010) எழுதுவதற்கு அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெற விரும்பும் தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. டிசம்பர் 2009 முதல் 6 மாதங்களுக்குப் பயிற்சி வழங்கப்படும். **இப்பயிற்சி மையத்தில் ஏற்கனவே பூர்வாங்கத் தேர்வு அல்லது முதன்மைத் தேர்வுக்கு முழு நேர பயிற்சி பெற்றவர்கள் அல்லது ஏற்கனவே முதன்மைத் தேர்வு எழுதியவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம்.**

**1. முழுநேர மற்றும் பகுதி நேரப் பயிற்சி :**

இரண்டு விதமான பயிற்சிகள் அளிக்கப்படும். தங்கும் வசதியுடனான முழுநேரப் பயிற்சியும் மற்றும் தங்கும் வசதியின்றி பகுதி நேரப் பயிற்சியும் கீழ்கண்ட பிரிவினருக்கு அளிக்கப்படும்.

**2. மொத்த இடங்கள் :**

| இனம் | விடுதியில் தங்குதல் | பகுதி நேரம் / மாலை நேரம் |
|---|---|---|
| ஆதி திராவிடர் | 82 | 41 |
| அருந்ததியர் | 16 | 8 |
| பழங்குடியினர் | 2 | 1 |
| மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | 36 | 18 |
| பிற்படுத்தப்பட்டோர் | 48 | 24 |
| பிற்படுத்தப்பட்டோர் – முஸ்லிம் | 6 | 3 |
| இதர வகுப்பினர் | 10 | 5 |
| **மொத்தம்** | **200** | **100** |

**3. கல்வித் தகுதி** - அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு

**4. வயது வரம்பு (1.08.2010 அன்று)** - அனைத்து வகுப்பினருக்கும் குறைந்தபட்ச வயது 21. இதர வகுப்பினர் 30 வயதுக்குட்பட்டவராகவும், பிற்படுத்தப்பட்டோர். பிற்படுத்தப்பட்டோர் – முஸ்லிம் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் 33 வயதுக்குட்பட்டவராகவும், ஆதிதிராவிடர், அருந்ததியர் மற்றும் பழங்குடியினர் 35 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**5. கட்டணம்** - (அ) விடுதியில் தங்கி பயிலுவோர்க்கு இலவசப் பயிற்சி அளிக்கப்படும். எனினும், இதர வகுப்பினர் முழுப் பயிற்சி காலத்திற்கும் ரூ.1000/- மட்டும் பயிற்சிக் கட்டணமாக செலுத்த வேண்டும்.
(ஆ) பகுதி நேரம் – மாலை நேரத்தில் பயிற்சி பெற பொதுப்பாடப் பயிற்சிக்கு ரூ.1000/- மற்றும் விருப்பப்பாடத்திற்கு ரூ.500/- கட்டணமாக செலுத்த வேண்டும். (பயிற்சி நேரம் மாலை 6.30 மணி முதல் 8.30 மணி வரை) இவர்களுக்கு உணவு, விடுதி வசதி வழங்கப்படமாட்டாது.

**6. விடுதி வசதிகள் (விடுதியில் தங்குவோர்க்கு மட்டும்)** - ஆதி திராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் – முஸ்லிம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் பெற்றோர் / பாதுகாவலர் / தனது ஆண்டு வருமானம் ரூ.1,00,000/-க்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மிகாமல் இருப்பின் அவர்களுக்கு உணவுக் கட்டணத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இதர மாணவர்கள் உணவு கட்டணமாக மாதந்தோறும் ரூ.800/- செலுத்த வேண்டும்.

**7. தேர்வு எழுத விரும்பும் மையம்** - சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம், வேலூர், சிதம்பரம், தஞ்சாவூர், தர்மபுரி மற்றும் சிவகங்கை (இதில் ஒரு மையத்தைத் தேர்ந்தெடுக்கவும்).

**8. விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியவை** - பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் சாதி மற்றும் பட்டப்படிப்பு சான்றிதழ் நகல்கள், மற்றும் சுய முகவரி எழுதப்பட்ட (ரூ.5/- அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட) ஒரு கவரை இணைத்து அனுப்ப வேண்டும். ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் விண்ணப்பத்தின் வலது பக்க மூலையில் ஒட்டப்பட வேண்டும். இன்னொரு புகைப்படத்தின் பின்புறம் பெயர் எழுதி, சிறிய உறையில் விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

**9. விண்ணப்பப் படிவம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**முதல்வர், அகில இந்திய குடிமைப்பணி தேர்வு பயிற்சி மையம், 225, இரண்டாவது அவென்யு, அண்ணாநகர் மேற்கு, சென்னை-600 040. தொலைபேசி எண். 044 - 26211475.**

**10. நுழைவுத் தேர்வு :** தகுதியுடைய நபர்கள் **08.11.2009 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.30 மணிக்கு** மேற்குறித்த 11 மையங்களில் 2 மணி நேர அளவில் நுழைவுத் தேர்வு (இந்திய வரலாறு, இந்தியப் பொருளாதாரம், இந்திய அரசியல். புவியியல், கணக்கு, பொது அறிவியல், நடப்பு நிகழ்வுகள் ஆகியவற்றில் கேட்கப்படும் கொள்குறி வினாக்களுக்கு சரியான விடையளிக்க வேண்டும்) எழுத வேண்டும். தகுதிபெற்ற மாணவர்கள் இனவாரியாக உள்ள இடங்களுக்கு ஏற்ப, நேரடியாகப் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். தேர்வு எழுதவருவோருக்கு பயணப்படி / தினப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது. நுழைவுத் தேர்வுக்கான மாதிரி கேள்வித் தாள் மற்றும் இதர விவரங்கள் கீழ்க்கண்ட இந்நிலைய இணையதளத்தில் உள்ளன. **www.civilservicecoaching.com.**

**விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 22.09.2009.**

**இயக்குநர், அண்ணா மேலாண்மை நிலையம்**
**மற்றும் பயிற்சித் துறை தலைவர், சென்னை – 600 028.**

### மாதிரி விண்ணப்பப் படிவம்
### பூர்வாங்கத் தேர்வு 2010 பயிற்சிக்கான விண்ணப்பப்படிவம்

| ஆதி | அருந்ததியர் | பழங்குடியினர் | மிபிவ/ சீம | பிவ/ பிவ (மு) | இதர பிரிவினர் |
|---|---|---|---|---|---|

| முழு நேரப் பயிற்சி | பகுதிநேரப் பயிற்சி |
|---|---|

(✓ பொருத்தமான கட்டங்களில் குறியிடவும்)

புகைப்பட வில்லை

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி மற்றும் 1.08.2010 அன்று வயது :
4. சாதி :
5. கல்வித் தகுதி :
6. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
7. ஆண்டு வருமானம்
   (அ) பெற்றோர் / பாதுகாவலர்
   (ஆ) தனது வருமானம்
8. தேர்வு எழுத விரும்பும் மையம் :
9. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி / தொலைபேசி எண் :
10. விரும்பும் பயிற்சி : முழுநேரப் பயிற்சி / பகுதி நேரப் பயிற்சி

### உறுதி மொழி

என்னுடைய விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையென உறுதி அளிக்கிறேன். மேற்குறித்த தகவல்களில் தவறேதும் இருப்பின் பயிற்சியில் சேருவதற்கு முன்போ அல்லது சேர்ந்த பிறகோ என்னுடைய அனுமதியை இரத்து செய்வதற்கு ஒப்புதல் அளிக்கிறேன்.

இடம் :

தேதி : **கையொப்பம்**

**இணைப்பு :**
1. கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம் சிறிய உறையில்
2. சுயமுகவரியுடன் ரூ.5/-க்கான தபால் வில்லையுடன் ஒரு உறை
3. சாதி மற்றும் பட்டப்படிப்பு சான்று நகல்கள் (விண்ணப்பதாரரின் கையொப்பமுடன்)

செ.ம.தொ.இ/921/வரைகலை/2009 Visit us at : "www.tn.gov.in"